முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 04 திகதி முதல்

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 11 திகதி வரை

(17.03.2024 ஞாயிறு முதல் 24.03.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அறத்தின் பலம் உலகமறிய
   அன்னதான சேவை ஆற்றி
   வரத்தை வாரி வழங்குகின்ற
   வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்தருமம் மெச்சி
   அறிவிப்பேன் அகத்திய மகரிஷியும்
   அரங்கன் நீகேட்க இந்தியா தமிழகத்தில்
   ஆற்றல்பட சோபகிருது சேல்திங்கள் தன்னில்
3. தன்னிலே சதுர்திகதிமேல் லாபதிகதிவரை
   தக்கபடி நடக்கும் வாரநிகழ்வாக
   நன்னயமாய் வருங்கால பலன்குறித்த
   நாட்டிடுவேன் வார ஆசிதனை
4. ஆசிதனில் வெப்பம் மிகுந்து
   அக்கினி போல் சோடைஉண்டு
   பேசிட பிணிசோடை கண்டுமே
   பொதுமக்களுக்கு அணுகி மேவும்
5. மேவிடும் தரும தெய்வபலத்தால்
   மேதினியில் ஆளுமை அதிகாரம்
   தாவிடும் பதவி மாந்தர்களாலே
   தத்தளிக்கும் திடநிலை ஏதுமின்றி

6. இன்றியமையாத தரும தெய்வ
இயல்பான மக்கள் சேவைதனை
நன்றுபெற அறிந்து வருகவே
நல்லாட்சி திடநிலை அடைந்து
7. அடைந்து அபகரிப்பு ஆதிக்க
ஆணவச் செயல்முறை களைந்து
தடையற தரும சேவைஆற்ற
தனித்துவம் உலகே வியக்கக்கண்டு
8. கண்டுமே ஆளுமை சக்திகள்
கவலையின்றி தொடர நேரும்
தொண்டுக்கு வந்த நோக்கம் மறந்து
தொல்லை தரும் வண்ணம் நிர்வாகம்
9. நிர்வாகம் இந்தியா தமிழகத்தில்
நிலைமைகளும் தொடர்ந்தால்
ஏற்பு கொள்ளா தலைமையாக
இனி மக்கள் மனம்விட்டு அகலநேரும்
10. நேருமை நீதி காக்கின்ற
நிர்வாகம் அடிப்படைதேவை போக்குகின்ற
பெருமைபட ஆளுமைபுரிகின்ற தலைமையே
போற்றப்படும் நல்லாட்சி ஞானஆட்சியாக
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 04ம் நாள் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 11ம் நாள் 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள் :

அறத்தின் பலத்தினை உலகம் அறிந்து உணர வேண்டியே எல்லையில்லாது அன்னதானம் செய்து தரும பலத்தை அளவிலாது உயர்த்தி அந்த தர்மபலத்தின் பலனை மக்களுக்கு வரமாக வாரி வழங்கி மக்களை கடைத்தேற்றுகின்ற மகா தவசியே தர்ம வள்ளலே ஆறுமுகஅரங்கமகா ஞானியே உமது அற்புதமான தருமத்தை போற்றியே அகத்திய மகரிஷி யானும்

அரங்கா தாம் இந்த தேசத்தின் எதிர்காலம் குறித்து கேட்க இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் பங்குனி மாதம் 04ம் நாள் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 11ம் நாள் 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இனி வரும் நாட்களிலே நாட்டினில் சூரிய வெப்பம் அதிகமாகி அக்கினி போல் வெப்பமும் அனல் காற்றும் வீசுகின்ற சூழல் உருவாகுமப்பா. வெப்பத் தாக்கத்தினால் நாட்டு மக்களுக்கு நோய்களும், வெப்பத்தினால் பலவித துன்பங்களும் உண்டாகுமப்பா.

ஆள்பவர்கள் தருமபலத்தின் மீதும் தெய்வபலத்தின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டுமப்பா ஆளுமை, அதிகாரம் உள்ளவர்களாலும் பதவி சுகத்திற்காக கட்சிமாறுபவர்களாலும் நாட்டினில் உறுதியான நிலை ஏதும் உண்டாகாமல் தத்தளிக்கும் நிலை உருவாகும்.

அவ்வாறு இல்லாமல் தருமத்தின் மீதும் தெய்வத்தின் மீதும் நம்பிக்கை கொண்டு நடந்து மக்களுக்கு தேவையானவற்றை சேவை மனப்பான்மையுடன் செய்து வந்தால் திடமான ஆட்சி நடக்குமப்பா.

பிறர் பொருளை அபகரித்தல், ஆதிக்க மனப்பான்மையினால் தவறான பாதையில் செல்லுதல் ஆணவமாக நடத்தல் என்ற தவறான பாதைகளில் செல்லாமல் தருமவழியில் பொறுப்பில் உள்ளவர்கள் நடந்து கொண்டால் இந்த உலகமே வியக்குமாறு தேசத்தின் சூழல் மாறிடும். ஆட்சி புரிபவர்களும் உறுதியான ஆட்சியை செய்வார்கள்.

அவ்வாறு இல்லாமல் தாம் மக்களுக்கு தொண்டு செய்வதற்காகத்தான் வந்துள்ளோம் என்பதை மறந்து மக்களுக்கு தொல்லைகள் தருகின்ற விதமாக நடந்து கொண்டால், நிர்வாகம் செய்தால் மக்களின் நம்பிக்கையை அவர்கள் இழக்க நேருமப்பா.

நேர்மையும், நீதியும் காக்கின்ற நிர்வாகமும் மக்களின் அடிப்படை தேவைகளை அறிந்து பூர்த்தி செய்கின்ற வகையிலே ஆட்சி செய்யும் தலைமையே இத்தேசத்தில் போற்றப்படும் அவர்களது ஆட்சி நல்லாட்சியாக ஞானஆட்சியாக அமைந்து சிறக்கும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–